<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>

<u>அசல் வழக்கு எண். 27/2021</u>

இந்நீதிமன்ற எழுத்தர் திரு J. மோகன் Grade –III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். ஜெயக்குமார் (PW1 )<br>வயது. | நாள் **27/10/2022** |
| த/பெ. | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

1. வா.சா.ஆ.1 26.09.2008 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தை தவிற நாங்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவத்து வருகிறோம் என்பதை நிரூபிக்க ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.,ஆ– 1 ல் பழைய புல எண் இல்லை என்றாலும் புதிய புல எண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 4 ல் ஒரே பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ல் பழைய புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 என்பது வருவாய் நிலை உத்தரவுபடி வழங்கப்பட்ட நோட்டிஸ் (9/(2)) என்றால் சரிதான்.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்ட பட்டா வ.சா.ஆ. 1 என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ல் குறிப்பிட்டுள்ள RPT No. 3559/2008 யை பார்த்தால் எதன் அடிப்படையில் எனக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

4.நான் ராதாகிருஷ்ணனின் வாரிசுதாரர்கள் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ. 4 யை தவிற எனது தகப்பனார் மற்றும் அவரது மூதாதையர்கள் தாவா சொத்தை அனுபவித்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 24/02/2003 ல் உள்ள வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

5. வா.சா.ஆ. 2 எனது தாய் லோகாம்பாள் செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான், இந்த ஆவணம் பி–மெமோ ஆகும். வா.சா.ஆ. 2 ல்

இரண்டு பட்டா எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அவை 602 மற்றும் 441 ஆகும். ராதாகிருஷ்ணனின் மனைவி லோகாம்பாள் என்பதை நிருக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாய் லோகாம்பாள் உடல் நலம் காரணமாக 27.08.2003 ல் இறந்து விட்டார். சுமார் 5 வருடங்களாக இருதய நோயால் அவதிப்பட்டு இறந்து விட்டார்.

6. லோகாம்பாள், ராதாகிருஷ்ணனுக்கு பிறகு தான் இறந்தார் . வா.சா.ஆ. 2 ல் 2 ம் காலத்தில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் என்னை பொறுத்த வரையில் வா.சா.ஆ– 2 என்பது பி–மெமோ ரசீது ஆகும். எனது வழக்குரையில் எந்த இடத்திலாவது தாவா சொத்தில் வீடு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்ல. தாவா அட்டவணையில் வீடு பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்து அட்டவணையில் வீட்டின் டோர் நம்பர் குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கை தாக்கல் செய்த போது எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் வசித்து வந்தேன். முன்பு அதன் கதவு எண். 2/295 என்று இருந்தது. அதன் பின் என்னவாக மாறியது என்று எனக்கு சரியாக தெரியாது. எத்தனை எண்களாக மாறியது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த வருடம் மாறியது என்ற விவரமும் எனக்கு தெரியாது.

8. வா.சா.ஆ. 3 ல் சர்வே எண். 693/1 மற்றும் சர்வே எண். 755/5 என்ற சர்வே எண்களுக்கு வில்லங்கம் கேட்டு மனு தாக்கல் செய்து அதற்கு பெற்ற வில்லங்க சான்று வா.சா.ஆ. 3 ஆகும். வா.சா.ஆ. 3 ல் நன்செய் நிலமா அல்லது புன்செய் நிலமா அல்லது கிராம நத்த நிலமா என்று சர்வே எண் அருகில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ. 3 யை 25 வருடங்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் வில்லங்கம் எதுவும் ஏற்பட்டிருந்தால் அதை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக மனு செய்து பெற்றேன். 25 வருடங்களுக்கு முன்பாக உள்ள வில்லங்கத்தை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. தாவா சொத்தில் ஒரே ஒரு தென்னை மரம் இருந்தது. அது தற்போது இல்லை. ஆன்தாயி அம்மாள் யார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து பிரதிவாதிகள் குடியிருப்பதற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது அவர்கள் சொத்து இல்லை. ரங்கநாதன்

செட்டியாரின் சொத்து ஆகும். இந்த விவரத்தை நான் வழக்கில் எதுவும் சொல்லவில்லை. தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில் பிரதிவாதிகள் குடியிருப்பதாக நான் சொல்லியுள்ளேன். அதை சொத்து விவரத்தில் சொல்லயுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur